# இரத்தின மாலை





யாழ். நெடுந்தீவு உயர்திரு தனிநாயக முதலியார் வழித்தோன்றலும்
வட்டக்கச்சி திருவையாற்றில் வசித்தவரும், கனடாவில் வாழ்ந்து
அமரத்துவமடைந்த

## திருமதி. பேரம்பலம் தங்கலட்சுமி

அவர்களின்

## நினைவுமலர்

29-04-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்புத் தெய்வத்தின்
பொற்பாதங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்



அன்பின் திருவுருவே மங்காத
புகழ்பூத்த அன்னையே
அன்போடு நற்பண்போடு
கண்ணியமாய் நற்குணசீலியாய்
தரணியில் சிறப்புற வாழ்ந்து
கண்ணை இமைகாப்பது போல்
பிள்ளைகளையும் காத்து
இல்லறத்தில் இவர் போல்
யாரென ஊர்உறவு போற்ற
இறையருளோடு வாழ்ந்த
எமது அன்புத் தாயின்
திருப்பாதங்களுக்கு
இம்மலர் சமர்ப்பணம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு
26-06-1950

இறப்பு
30-03-2012



அவர்களின்

# திருமதி. பேரம்பலம் தங்கலட்சுமி

## திதி வெண்பா

ஆண்டு கர வருஷம் பங்குனி முப்பது
வெள்ளி கூடிய அஷ்டமி சுக்கில பட்சத்தில்
ஓங்கு புகழ் உத்தமியாள் தங்கரத்தினம்
தேடி நிமலனடி சென்றடைந்த நன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

-திருவள்ளுவர்

ஐம்புலத்தார் தொண்டுகளில் ஆகச் சிறந்ததெனத்
தென்புலத்தார் நற்கடமை செய்.

- ஞானபண்டிதன்

## அமரர்



# உயர்திரு சின்னத்தம்பி பேரம்பலம்

## அவர்கள்

1996ம் ஆண்டு வெளியிடப்பட்ட நினைவு மலரிலிருந்து

அன்னை மடியில்
1944.10.24

ஆண்டவன் அடியில்
1996.06.21

### திதி வெண்பா

சீரார் ஸ்ரீ தாத்ரு வருஷம் ஆனி இருபத்தி ஒன்று வெள்ளி
சஸ்டி திதியதனில் பூர்வபட்ச வளர்பிறையில்
சாந்த குணமே உருவான அன்பன் பேரம்பலம்
சேர்ந்தார் சிவபதமே சென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| திருமுறைகள் | 01 |
| சிவபுராணம் | 04 |
| கந்தசஷ்டிகவசம் | 07 |
| திருப்பொற்சுண்ணம் | 13 |
| கௌரிகாப்பு | 18 |
| சகலகலாவல்லிமாலை | 20 |
| இராகுகால துர்க்காஅஷ்டகம் | 23 |
| அம்பாள் அர்ச்சனை | 25 |
| பட்டினத்தார் பாடல் | 28 |
| வாழ்க்கை வரலாறு | 33 |
| அன்னாரின் நினைவைச் சுமந்து | 38 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

மூஷிக வாகன மோதக ஹஸ்த
ஸாமர கர்ண விளம்பிர சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறத் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிர்வளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிர்வளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆழிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்னும் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற்... குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத்... தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற்... குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காம... பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலி வளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**கடவுள்**:- மனித,விஞ்ஞான,அறிவு ஆற்றலால் அறியமுடியாத மேலான ஒரு சக்தி.

**ஜீவபோதம்:-** முனைந்து நிற்கையில் சிவபோதம் மறையும்.
**சிவபோதம்:-** முனைந்து நிற்கையில் ஜீவபோதம் ஒழியும்

**சத்தியம்**:-உன் இதயத்தில் ஒரு சக்தி குடியிருப்பது போன்றது.
**எதிர்ச் சொற்கள்**:- சுடுகாடு-இடுகாடு. குணக்கு-குடக்கு. அன்பு-வம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணிக்கவாசக சுவாமிகளின்**

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
என்னிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உள்ளவென் னுள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றேன்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கந்தசஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்ப்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.



## குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச செவ்வாயும்
நன்னெறி நெற்றியிற் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
புல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செகண செகண
மொகமொக மொகமொக மொக மொக மொகென
நகநக நகநக நகந நகென
டிகுகண டிகுடிகு டிகுகண டீகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிசெவி யிரண்டும் வேலபர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பதிருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிறிறிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் கருணைவேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் பழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பரமராஷசதரும்
அடியனைக கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி அத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியம் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்க சொக்கு சூர்ப்பைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
குடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறயட விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைததாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் என்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த அனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇருக்க யானனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பாதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலங்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணிந்த கையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலி ருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள எந்தன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியம் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்து நாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமின்
அந்தரர் கோன் அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே. 3

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 5

உலக்கை பலவோச்சு வார் பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 7

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாள்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடச்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடச்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 15

ஆவகை நாமும்வந தன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே. 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே. 18

வட்ட மலர்க்கொன்னைற மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம் மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்க
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எரிவாகப் பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற்கா

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமா தேவியாரே
காலமெல்லாம் தின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணம் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் உயிராக
என்றும் இருந்தே என்னைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கதி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாயற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டுவீர்
நெறியறியாத் திகைக்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்வென்றே நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பாழ் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
கானிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை காணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசவின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டுபோற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகிறேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சக்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெனைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லி மாலை



வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பண்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கைடக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுகந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோ திமம்பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைமெகாள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பிளிங்கு போல்வாள்என உள்ளத்ததி னுள்ளே
இருப்பளிங்கு வாராது இடர்.

புடிக நிறமும் பவளச் செவ் வாயும்
குடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் கலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி

வெள்ளை கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

பூத்தவளே புவனம் பதினான்கையும், பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூலா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி மற்ற ஓர் தெய்வம் வந்துதிப்பதே!

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறுங்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகித்
குலவு சித்திரங் கோபுரங் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வ அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உலகை யின்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்'
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை ஆனவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்ககையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

செம்மையானவள் துர்க்கா செழுமானவள்
அம்மையானவள் அன்பத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மை யானவள் என்றம முழுமை துர்க்கையோ
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிறு மானவள் துர்க்கா படரும் கொம்பவன்
பண்பு பொங்கிட என்னள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணி யானவள்
அன்ப உற்றவள் துர்க்கா! ஆபய விடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருசூலி மாயவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

ராகுதேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக் கமல துாக்கையே
கருணை துர்க்கையே விரத்தகனத் துர்க்கையே
அன்பு துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்னை துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

(தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே என்ற நாமம் வரும்போது விரதம் இருப்பவர்கள் நமஸ்காரம் செய்வது நல்லது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் அர்ச்சனை
# 108 போற்றி



(மதுரை ஸ்ரீ மீனாட்சிஅம்மன் சந்நிதியில் உள்ளது)

1. ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
2. ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
3. ஓம் அருமறையின் வரம்பே போற்றி
4. ஓம் அறம் வளர்க்கும் அம்மையே போற்றி
5. ஓம் அரசிளங் குமரியே போற்றி
6. ஓம் அப்பர் பிணி மருந்தே போற்றி
7. ஓம் அமுத நாயகியே போற்றி
8. ஓம் அருந்தவ நாயகியே போற்றி
9. ஓம் அருள்நிறை அம்மையே போற்றி
10. ஓம் ஆலவாய்க் கரசியே போற்றி
11. ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
12. ஓம் ஆதியின் பாதியே போற்றி
13. ஓம் ஆலால சுந்தரியே போற்றி
14. ஓம் ஆனந்த வல்லியே போற்றி
15. ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
16. ஓம் இமயத் தரசியே போற்றி
17. ஓம் இடபத்தோன் துணையே போற்றி
18. ஓம் ஈஸ்வரியே போற்றி
19. ஓம் உயிர் ஓவியமே போற்றி
20. ஓம் உலகம்மையே போற்றி
21. ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
22. ஓம் எண்திசையும் வென்றாய் போற்றி
23. ஓம் ஏகன் துணையே போற்றி
24. ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
25. ஓம் ஐயம் தீர்ப்பாய் போற்றி
26. ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
27. ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
28. ஓம் கற்றோர்க் கினியோய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
30. ஓம் கடம்பவன சுந்தரியே போற்றி
31. ஓம் கல்யாண சுந்தரியே போற்றி
32. ஓம் கனகமணிக் குன்றே போற்றி
33. ஓம் கற்பின் அரசியே போற்றி
34. ஓம் கருணை ஊற்றே போற்றி
35. ஓம் கல்விக்கும் வித்தே போற்றி
36. ஓம் கனகாம்பிகையே போற்றி
37. ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
38. ஓம் கற்பனைகடந்த கற்பகமே போற்றி
39. ஓம் காட்சிக் கினியோய் போற்றி
40. ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி
41. ஓம் காமாட்சி அம்பிகையே போற்றி
42. ஓம் காளிகாம்பாள் அம்பிகையே போற்றி
43. ஓம் கிளியேந்தியே கரத்தோய் போற்றி
44. ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
45. ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
46. ஓம் கூடற்கலாப மயிலே போற்றி
47. ஓம் கோலப் பசுங்கிளியே போற்றி
48. ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
49. ஓம் சக்தி வடிவே போற்றி
50. ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
51. ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
52. ஓம் சித்தம் தெளிவிப்பாய் போற்றி
53. ஓம் சிவயோக நாயகியே போற்றி
54. ஓம் சிவானந்த வல்லியே போற்றி
55. ஓம் சிங்கார வல்லியே போற்றி
56. ஓம் செந்தமிழ்த்தாயே போற்றி
57. ஓம் செல்வத்துக் கரசியே போற்றி
58. ஓம் சேனைத் தலைவியே போற்றி
59. ஓம் சொக்கர் நாயகியே போற்றி
60. ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய்போற்றி
61. ஓம் ஞானாம்பிகையே போற்றி
62. ஓம் ஞானப் பூங்கோதையே போற்றி
63. ஓம் தமிழர் குலச்சுடரே போற்றி
64. ஓம் திருவுடை யம்மையே போற்றி
65. ஓம் திசையெல்லாம் புரந்தாய் போற்றி
66. ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
67. ஓம் திருநிலை நாயகியே போற்றி
68. ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
69. ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
70. ஓம் தென்னவன் செல்வியே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. ஓம் தேன்மொழி யம்மையே போற்றி
72. ஓம் தையல் நாயகியே போற்றி
73. ஓம் நற்கனியின் சுவையே போற்றி
74. ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
75. ஓம் நல்ல நாயகியே போற்றி
76. ஓம் நீலாம்பிகையே போற்றி
77. ஓம் நீதிக் கரசியே போற்றி
78. ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
79. ஓம் பழமறையின் குருந்தே போற்றி
80. ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
81. ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி
82. ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
83. ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
84. ஓம் பசுபதி நாயகியே போற்றி
85. ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
86. ஓம் பாண்டிமா தேவியின் தேவி போற்றி
87. ஓம் பார்வதி அம்மையே போற்றி
88. ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
89. ஓம் பெரிய நாயகியே போற்றி
90. ஓம் பொன்மயி லம்மையே போற்றி
91. ஓம் பொற்கொடி அன்னையே போற்றி
92. ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
93. ஓம் மங்கள நாயகியே போற்றி
94. ஓம் மழலைக் கிளியே போற்றி
95. ஓம் மனோன்மணித் தாயே போற்றி
96. ஓம் மண்சுமந்தோர் மாணிக்கமே போற்றி
97. ஓம் மாயோன் தங்கையே போற்றி
98. ஓம் மாணிக்க வல்லியே போற்றி
99. ஓம் மீனவர்கோன் மகளே போற்றி
100. ஓம் மீனாட்சி அம்மையே போற்றி
101. ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
102. ஓம் முக்கண் சுடர்விருந்தே போற்றி
103. ஓம் யாழ்மொழி அம்மையே போற்றி
104. ஓம் வடிவழ கம்மையே போற்றி
105. ஓம் வேலனுக்கு வேல் தந்தாய் போற்றி
106. ஓம் வேத நாயகியே போற்றி
107. ஓம் சௌந்தர நாயகியே போற்றி
108. ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி
109. ஓம் அம்மையே அம்பிகையே போற்றி
110. ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.

வட்டியிலுந் தொட்டிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.

நொந்து சுமந்து பெற்று நோவமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்.

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப பார்த்து மகிழாமல் -உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மகனே எனவழைத்த வாய்க்கு

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்க மூள்கவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்ப
லாகுதே பாவியே னையகோ! – காகம்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வேந்தாளோ சோணகிரி வித்தகா நின் பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ சந்தமும்
உன்னை நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்.

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மி விம்மியிரு
கைத்தல மேல் வைத்தழு மைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணியப் பாவமுமே.

# பட்டினத்துப் பிள்ளையார்

## பாடல்கள்

அறம்தான் இயற்றும் அவனிலும்
கோடி அதிகம் இல்லம்
துறந்தான் அவனில் சதகோடி
உள்ளத் துறவுஉடையோன்
மறந்தான் அறக்கற்று அறிவோடு
இருந்தும்ஈரு வாதனை அற்று
இறந்தான் பெருமையை என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கும் பொழுது கொடுவந்தது
இல்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது
இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே.

கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்து உருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே.

**முயற்சி**:- வாழ்வை வளமுடன் வடிவமைப்பதின் முதற்படி.
**மனிதனுக்கு அனுபவமூட்டுவது**:-
அன்பு, அறிவு, உணர்வு, மொழியாகும்.

**காலம் (நேரம்)** வாழ்க்கைமுறைகள் அனைத்திலும்பெரும்பங்குவகிக்கின்றது.
**விரதங்கள்:** மனதை ஒரு நிலைப்படுத்தி கட்டுப்பாட்டுக்குள்வைத்திருப்பது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரின்ப பேறளிக்க - நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையாரை வேண்டி...

ஊர் காக்க தான் தோன்றி உருவெடுத்து
உதயத்தில் ஆலமர நிழலமர்ந்து
கார் மேகம் மழை ஈந்து காப்பது போல்
காத்தருள கணநாதன் ஈந்த ஈசா
பார்வதியாள் பாலகனே – பாங்குடனே
அன்னை தந்தையே உலகென வலம் வந்து
அருள் ஞானம் பெற்ற முன்னவனே – யாம்
வணங்கும் ஆலமாவனத்துறை ஐங்கரனே.

உன்னையே எண்ணித்தினம் பூசித்த
உத்தம பத்(க்)தி குலம் உதித்த தேவி
தன் கண்ணையே இறந்த பின்பும்
தானம் ஈந்த கருணையே உருவான மேலாள்
அன்னை அபிராமி தோற்றம் கொண்ட
அகல் விளக்கு எங்கள் தாய் இரத்தினத்தை
நண்ணி அவள் பிறவிப் பிணி அறுத்து
நல்கிடுவாய் மீளாத பேரின்ப முத்தி.

**இரா. வயிரவநாதன்**

# நித்தமும் தொழுத வட்டக்கச்சி முருகனை வேண்டி

நித்தமும் உந்தனுக்கு திருவிளக்கிட்டாள்
நேரம் தவறாமல் பணிவிடைகள் செய்தாள்
அருகிருந்த உன் தலத்தை பெரிதாக்கி மெருகேற்ற
ஆசையுடன் தன்னிலத்தை ஈந்து களிப்படைந்தாள்
நாடு விட்டு அகன்றும் உந்தன் நற்பணிகள் புரிய
வாரி நிதி அளித்து வாழ்வெலாம் தொண்டு செய்த
மெய்யடியாள் தங்கலட்சுமிக்கு மாறாத பேரின்ப பேறளிப்பாய்
வட்டக்கச்சி நகர் இருந்து வரம் அருளும் ஆறுமுகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவையாறு ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் துதி

கனகாம்பிகை குளத்தருகே வீற்றிருக்கும்
கனகாம்பிகைத்தாயே
பிள்ளைகளும் பெற்றெடுத்து, செல்வமும்
செழிப்பான வரம் தந்தாய் அம்மா அன்று
ஆனால் உன் சோதனையோ காட்டி மறைக்கும்
காரண காட்சியோ?
அம்மா தந்தாய் நீயே!
அழைத்தவளும் நீயே அம்மா
அன்னையை உம் பதந்தே ஏற்று
மோட்சம் அளிப்பீரே.

# ரொறன்ரோ துர்க்கேஸ்வர அம்மனை வேண்டி

வந்தோற்கு வாழ்வு அளிக்கும்
வையகமாம் ஓங்கு புகழ் கனடா
ரொறன்ரோ மாநகர் இருந்து
நம்பி வரும் அடியவற்கு
நலம் அருளும் நாயகியே
இப்புவி ஆழும் எங்களின் தாயே
அன்னை அகிலாண்டேஸ்வரி
அபிராமி அன்னை துர்க்கையே.

அல்லும் பகலும் உனை எண்ணி
ஆடி தோறும் நோன்பிருந்து
நெய்விளக்கேற்றி – நித்தமும்
பூசித்த தையல் தங்கரத்தினத்தை
ஏற்று, அல்லல் பிறவி அறுத்து
பொன்னடி ஈந்து பேரின்ப பேறளிப்பாய்
இப்புவி ஆழும் அகிலாண்டேஸ்வரி
அபிராமி அன்னை துர்க்கையே.

இரா. வயிரநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

**பிறப்பு**...



தமிழீழத்தின் இதயபூமியாம் வட்டக்கச்சியில் பொதுநலமே தன் பணியென வாழ்ந்த பெருந்தகையின் வாழ்நாள் நினைவுகளை நினைத்துப் பார்க்கும்போது பழைய நினைவுகள் எங்கள் உள்ளத்தை தொட்டுச் செல்கின்றது.

இந்து சமுத்திரத்தில் முத்தெனத்திகழும் ஈழ வளநாட்டின் வடக்கே யாழ்ப்பாணத்திற்க்கு அண்மையில் அமைந்துள்ள சப்த தீவுகளில் பெரியது நெடுந்தீவாகும். இத்தீவிற்க்கு பால்த்தீவு, பசுந்தீவு delft என பலபெயர்கள் உண்டு.பல பெரியோர்களையும், புத்தி ஜீவிகளையும் தந்த பொன்னாடு நெடுந்தீவாகும். நெடுந்தீவு உதயபதியை சேர்ந்த விசுவநாத முதலியார் பரம்பரையில் வந்துதித்த பால்வளம், ஏர்வளம் கொண்ட பண்பு நிறை சீராளன் "செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும்" உயர் குணம் படைத்த உத்தமனாம் மணியர் ஐயம்பிள்ளையின் மூத்த மகனான கணபதிப்பிள்ளைக்கும், இருமரபும் தூய தனிநாயகமுதலி வழிவந்த பாரியென வளங்கி பாருளோர் போற்ற வாழ்ந்த, பத்(க்)தி குலம் உதித்த சின்னவெள்ளையர் என செல்லமாக அழைத்த கோமான் வயிரவநாதர் அவர்களின் புதல்வி சின்னம்மாவுக்கும் நாலாவது மகளாக ஆனித்திங்கள் 26ம் நாள் 1950ம் ஆண்டில் அவதரித்தார் (26-06-1950).பதினொரு வயதாகும் போது அன்புத்தாயார் சின்னம்மா காலமாகவே, அன்னையின் அன்பையும், அரவணைப்பையும் இழந்த துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானார். பின்பு அன்புடன் அரவணைத்து கார்த்த உயிர் அண்ணன் நடராசாவும் அகாலமரணமானார். இருந்தும் தந்தையின் கண்டிப்பான நெறிப்படுத்தலோடும், சகோதரிகளான சரஸ்வதியும், பராசக்தியும் தாய் போல இவரையும் இளையவர்களான தங்கம்மா, ஐயாதுரை, செல்வநாயகி, கோபாலப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரையும் காத்து வளர்த்தனர். சிற்றன்னைகளான அன்னப்பிள்ளை, தையல்முத்து மற்றும் மாமன்மார், மாமிமார், மற்றும் தந்தை வழிஉறவினர்கள் என்றும் இவர்களுக்கு ஒத்தாசையாகவும், உறுதுணையாகவும் இருந்தனர்.

## வாழ்க்கைச் சிறப்பு...

ஐந்து வயதிலிருந்து இல்லற வாழ்வில் இணையும் வரை வட்டக்கச்சியிலே வாழ்ந்தார். ஆரம்ப கல்வியை வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்தார். தன் கல்வியிலும் பொதுப்பணியிலும் மனம் தளராது பாடுபட்டார். தந்தையாருக்கு வலதுகரமாகவும், வீட்டுக்கு பொறுப்பு வாய்ந்தவராகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் பட்டியலில் இருப்பதால். வட்டக்கச்சியின் பொதுத் தேவைகளுக்கு இவர் அழைக்கப்படுவார். வட்டக்கச்சி கிராம முன்னேற்ற சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராக இருந்த போது இவரின் முயற்சியினால் வட்டக்கச்சியில் (நெசவுசாலை) கைத்தறி நிலையமொன்றையும், ஆறுமுகம் வீதியில் வாசிகசாலையும் உருவாகுவதற்கு முன்னின்று உழைத்தார்.

வட்டக்கச்சியில் தனது வீட்டுக்கு அருகாமையில் அமைந்துள்ள முருகன் கோயில் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டார்.

வளர்மதியென வளர்ந்து வாலிபம் எய்தி மணப்பருவம் அடையவே, நெடுந்தீவு மேற்கு உயர்திரு சின்னத்தம்பி வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கிளிநொச்சி திருவையாறு முதலாம் பகுதியில் வசித்து வந்தவருமான சின்னத்தம்பி பேரம்பலம் அவர்களை வாழ்க்கை துணைவராக கரம் பிடித்தார். காவியம் எழுதக்கூடிய கணவரே அவருக்கு கிடைத்தார். இது ஆண்டவனின் கொடையென்றும் கூறலாம். இங்கிதம் தெரிந்த இளைய மைத்துனிமார்களான நாகம்மா, தங்கம்மா, செல்லம்மா, முத்து ஆகியோருடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தார். திருமணமான பின்பு இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் ஆலயத்திற்கு தன்னால் இயன்ற சமயப்பணிகள் பலஆற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈவனஈந்து இல்லறம் சிறக்க மகிழ்வுடன் திருவையாற்றில் வசித்து வரும் வேளை, "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற" எனும் வள்ளுவரின் பொய்யாமொழிக்கு இணங்க சத்தியபாமா, சத்தியவதனா, சத்தியகஜனி, உதயணன் எனும் நான்கு மழலைகழுக்கு தாயானார். குழந்தைகளுக்கு கல்வி புகட்டி சீராக வளர்த்து வரும் வேளை. பேரப்பலம் அவர்கள் புலம் பெயர்ந்து ஜேர்மனியிலும் பிரான்சிலும் சிலகாலம் வாழ்ந்தார். தாயகத்தின் விடுதலைக்காக போராடிய வீரர்களுக்கு தங்குமிட உணவு வசதிகள் செய்து கொடுத்ததோடு தமிழீழ விடுதலைக்காய் அயராது பாடுபட்டார்.

இந்திய இராணுவமும் கூலிப் படைகளும் தாயைப்போல் காத்துவந்த தந்தையை (கணபதிப்பிள்ளை) பொதுச்சந்தையில் வைத்து துப்பாக்கியால் சுட்ட செய்தியறிந்து சொல்லொனாத் துயரமடைந்தார். மூத்த மகள் பாமாவை கனடா அனுப்பி வைத்தார். நாட்டின் போர்ச்சூழல் காரணமாக திருவையாற்றில் இருக்க முடியாத நிலமையில் தன்குடும்பத்தை பிரான்சுக்கு அழைக்கும் நோக்கத்தோடு இந்தியாவுக்கு அழைத்தார். உடன் பிறப்பான விடுதலை இயக்கத்தின் (ஐயாச்சி) மரணமடையவே தாயகத்திற்கு திரும்பிச் சென்றார். மீண்டும் பிரான்சில் வாழ்க்கையை தொடர காத்திருந்த போது, நீர்கொழும்பில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. கணவருக்கு திடீரென ஏற்பட்ட சுகயீனத்தால் பத்து ஆண்டுகளின் பின் பிரான்சில் கணவனை சந்திக்கும் நிலமைக்கு ஆளானார். வைத்தியரின் அனுமதி பெற்று சுகயீனமுற்றிருந்த கணவரை தான் வைத்துப் பார்க்க வேண்டும் என்ற உறுதியோடு இலங்கைக்கு கூட்டிச் சென்றார். காலம் விரைந்து செல்ல பிள்ளைகளும் மணப்பருவம் எய்தினர். பிள்ளைகள் மனம் விரும்பியவர்களான குணராஜா, ஆனந்தராசா மற்றும் றொகான் ஆகியோரை பெருமையுடன் ஏற்று அவர்களின் குடும்ப வாழ்க்கை பாதையை தொடங்கி வைத்தவர். தன் கணவரின் வைத்தியத்தில் அவருக்கு ஏற்ற பணிவிடைகள் புரிந்து வள்ளுவனுக்கு ஏற்ற வாசுகியைப்போல எல்லோரும் மெச்சும் வண்ணம் பராமரித்தார். காலனின் பிடியிலிருந்து கணவரை காப்பாற்ற முடியாமல் கண்ணீர் விட்டழுதார். திருகோணமலையில் இளைய மகளுடனும் சில காலம் வாழ்ந்தார். எதையும் தாங்கும் இதயமும், உறுதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். துன்பங்களினால் சோர்ந்து, துவண்டு வீழ்ந்திடாது கம்பீரமாக எழுந்து நின்றவர். அன்னாரின் மூத்த மகளிடம் கனடா வந்து சேர்ந்தார். பின்பு மற்றைய பிள்ளைகளும் கனடா வந்து சேர்ந்தார்கள். அன்பு பேரர்களான விதுசன், பிரவினா, அபிசனா, கிருபாகர், கீர்த்தனா, சுமித், சுபானி இவர்களுடன் அளவளாவியும், விளையாடியும், ஆய்ந்த நல் தமிழ் கற்ப்பித்தும் பாசமுடன் போற்றி பார்த்தெடுத்து வந்தார். மகன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகளோடு தாயகத்திற்கு செல்லும் போது சிங்கப்பூர் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு, இந்தியாவிற்கு சென்று பல திருத்தலங்களை தரிசித்துக் கொண்டு தாயகத்தில் உள்ள பல ஆலயங்களையும் சுற்றுலா இடங்களையும் பார்த்து வந்தார். பல தடவைகள் தாயகம் சென்றாலும். தாயகத்தின் பேரழிவின்(2010) பின்பும் தாயகம் சென்று போரினால் பாதிக்கப்பட்டவர்களின் துன்ப துயரங்களை கேட்டறிந்தார்.

உறவுகள், ஊராருடன் கூடிக் குலாவி தை பிறந்ததும் (2012) சந்தோசமாக இருந்த வேளையிலே, குரல்கள் தடுமாறியபோது வைத்திய சாலையில் சேர்த்தபோது, புற்றுநோயெனும் கொடிய செய்தி கேட்டதனால் கதி கலங்கி போனது உறவுகளெல்லாம். பேரிடியென வந்த நோய்க்கு ஆளாகி காலன் இவரை கவர்ந்து செல்ல துடித்தான்.

## பொதுப்பணிச் சிறப்பு

பொதுப்பணியே தன் பணியென வாழ்ந்தவருக்கு. கனடா வந்தும் பல ஆலயங்களுக்கு சென்று தன்னால் இயன்ற பங்களிப்பினை செய்து வந்தார். கனடா துர்க்கேஸ்வர துர்க்கை அம்மனையே குலதெய்வமாகவும் வணங்கிவந்தார். இவருடைய துர்க்கையம்மனின் தெய்வீகத தன்மையை நன்கு அறிந்த.துர்க்கேஸ்வரஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தியாகராஜா குருக்கள் (கணேஸ் சுவாமிகள்) அவர்கள் செய்தியறிந்ததும் வீட்டுக்கே கண்ணீர் அஞ்சலி,மலர்மாலையுடன் குடும்ப சகிதம் வந்து ஆசீர்வதித்து தாயின் உயிர் துர்க்காவின் பாதங்களை சென்றடையுமென்று அவர்கூறிய வார்த்தைகள் எல்லோர் மனதிலும் கண்ணீர் வரவைத்தது. வரசித்தி விநாயகர் ஆலயம் சார்பாக மலர் மாலை அனுப்பி அஞ்சலியை தெரிவித்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வேளையிலும் இன்முகத்துடன் எல்லோருடனும் பழகும் பண்புடையவராதலால், எல்லோர் இதயங்களிலும் நீங்கா இடம் பிடித்துக் கொண்டார். தன் வாழ்நாளில் யாருக்குமே தீங்கு நினைக்காத அமைதிப்புறா தன்னுயிர் விட்டபோதும், தன் கண்களிரெண்டையும் கண்ணற்றவருக்கு தானமாக கொடுத்த செய்தி கேட்டு ஊரும் உறவுகளும் மன நெகிழ்வடைந்தனர். எல்லோர் இதயங்களில் அழியா நினைவை தங்கரத்தினமாக பதித்து விட்டு, இவர் அன்புடன் நேசித்த தாய், தந்தை, கணவன், சகோதரர்கள், உறவுகளைத் தேடி பொய்யுலகை விட்டு புறப்பட்டு விட்டார். இந்துக்களின் விசேட தினமான வெள்ளியன்று தனது அகவை 61ல் (30-03-2012) இறைவனுடன் இரண்டறக் கலந்தார். "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு"

பிறந்திடுவோர்களெல்லாம் - முன்செய்
பெறுவினைப் பயனால் விதியெனும்
சாகரத்தின் வீழ்ந்தமிழ்ந்து உளன்று
அழிந்து புவியினை நீங்கி போவதே உறுதி

வாழ்ந்த காலங்களை கணக்கிட்டு கொள்வதை விட. வாழ்ந்த காலத்தில் செய்த சேவைகளே என்றும் உயர்த்திக் காட்டும்.

**வலியும் விவேகமும்**:-உடையவன் எதையும் சமாளிக்கதெரிந்துகொள்கிறான்.

**விதி**:- புரிந்துகொண்டு வடிவமைத்தால் வாழ்வு வளமாக அமையும்

**மன உறுதி**:- மனதில்தான் சுயகட்டுப்பாடு தொடங்குகின்றது.

**வறுமைதோன்றின்**:- வடிவு, தனம், மனம், குணம், குடி, குலம், நம்மை விட்டு ஓடிப்போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே என் உறைவிடம்

முன்னம் எனைப் பெற்று
முத்தாய் வளர்த்தெடுத்த
அன்னை, தந்தை,
அரிய சகோதரர்கள், உறவுகள்
ஒன்றாய் குதூகலித்த நண்பர்கள்
நான் துள்ளித் திரிந்த நிலம்
எல்லாம் தொலைத்து, ஏதிலியாய்
உயிரை ஊரில் விட்டு
உடலை சுமந்து சின்ன வயதினில்
வந்தேன் கனடா தேசம்.

என்றோ ஓர் நாள்
எல்லோரும் சேர்ந்து
ஒன்றாய் இருப்போம் என
உரைத்தது என் மனம்.

பொல்லாத காலம் - என்
பொன்னான தந்தையும்
நோயில் அகப்பட்டு
நொந்து பட்ட வேளை
இறுதி வரை நின்றிருந்தேன்.

என்னைப் புரிந்து – நிதம்
ஏற்ற உதவி செய்யும்

அன்புக் கணவனின்
அனுசரணையோடு
தனித்து நின்ற – என்
தாயையும் அழைத்தேன்.

காலம் கனிந்து வர
அந்த ஈசன் அருளால்
எல்லோரும் ஒன்றிணைந்து
இன்புற்று இருக்கையிலே

**தை 16 2012**
அம்மாவின் தொண்டையில்
அரும்பிய துளியளவு
திரட்சியைப் பரிசோதித்த
வைத்தியர்கள் எனை அழைத்து
பொல்லாத புற்று நோய்
இனி ஏதும் பலன் இல்லை
என வைத்தியரும் கைவிரிக்க

மீண்டும் எரிமலை வெடிக்க
சுக்கு நீறாகி சோர்ந்து விழுந்தேன்
இடியென என் வாழ்வில்
ஏன் இந்த துன்பங்கள்
தேற இயலவில்லை

எல்லா முயற்சியிலும்
ஏதும் பலனில்லை
விதியின் கரங்கள்
வேகமாய் நசுக்க

உயிர் ஈந்து – என்
உடல் சுமந்த – என்றும்
தோழியாய், வழிகாட்டியாய்
என்ன வலியையும் ஏற்று சுமந்து
என்னையும், பிள்ளைகளையும்
வழிநடத்திய, என்னுயிர்த்தாய்
எனைப் பிரிந்து ஏகினள்.

**மகள் - பாமா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாங்கி சுமந்த தாயே!!!

தாயே என்னை தாங்கி சுமந்து
தரணிக்கு ஈந்து தாபரித்து போற்றி
நோய், பிணி அணுகாது நுட்பமாய்
நோன்பிருந்து கார்த்து எம்மை வளர்த்தாய்
சீரான கல்வியோடு சிறந்த நல் ஒழுக்கம்
செம்மையாய் சிறாரிலே ஊட்டி வளர்த்த
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமியே - உனை
தாயாக பெற்றதினால் பெரும் பேறு அடைந்தேன்.

போதாத போரால் பொன், பொருள் இழந்து
புரியாத வயதினில் எமை விட்டு ஏகி
புறப்பட்டு தந்தை ஐரோப்பா செல்ல
தாயும். தந்தையும் நீயே ஆகி
தரணியில் எமை தலை நிமிர்ந்து வாழவைத்தீர்
செல்லும் இடம் எல்லாம் சிறப்புடன் வாழ
சீரிய புத்திகள் உரைப்பீர் நாளும் - ஐயகோ
அவனி உள்ள வரை எப்படி மறப்பேன்?

நான் பெற்ற மக்களை கூடவே இருந்து
நலமொடு வாழ பேணி வளர்த்தாய்
நோயினால் வீழ்ந்த அப்பாவை
நோகாது பார்த்து இறையடி சேர்த்தாய்
காலம் எலாம் கஸ்டம் சுமந்து
நிழலாய் இருந்து நேர் வளி காட்டி
எமை தாங்கி சுமந்த தாயே
தனித்தெமை விட்டு, போயினை ஏனோ??

**மகள் - வதனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பொக்கிஷமே...

வண்ணமலரே – எங்கள்
வாடாத றோசாவே – என்றும்
அணையா அகல் விளக்கே!
தன் ஒளியாய் வீசி
தாங்கி எமைச் சுமந்து
இப்புவியில் எம்மை
ஈன்றெடுத்த அன்னையே!
உன்னையே உருக்கி
ஒளியை எமக்கு ஈந்து
பொத்தி வளத்தெடுத்த பொக்கிஷமே!!!

என்னை அழைத்து வந்து
இங்கு தனியே விட்டு – நாம்
எல்லோரும் சேர்ந்து இங்கிருக்க
அப்பாவுடன் சேர்ந்து ஒன்றாய்
அமலன் அடி இருக்க சென்றனையோ?

**மகள் - ஜெயா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினம் உனை பூசிப்பேன்...

நித்தமும் எனக்காய் நேர்த்தியும், விரதமும்
நேந்தை நினைந்து அழுவேனோ?
நினைவிலா நாளிலே தந்தை விட்டகலவே
நேர்த்தியாய் வளர்த்ததை நினைந்தழுவேனோ?

சீர் பெறு கல்வியை சிறப்பாக கற்பித்த
செயலினை நினைந்தழுவேனோ?
என்ன பிழை செய்யினும் ஏற்று அரவணைத்த
இயல்பினை நினைந்தழுவேனோ?

பல்வகை பண்டங்கள் பாங்குடன் சமைத்து – பசியோடு
எனைப் பார்த்திருந்ததை நினைந்தழுவேனோ?
பாருக்குள் எனை நேசித்த பண்பான தெய்வமே!
பாவியேன் தொலைத்து விட்டேன்.

தென்னவன் மலரடி சேர்ந்த என் அன்னையே
செத்து நான் வரும் வரை என் சிரமதில்
உன் திரு நாமம் செதுக்கியே வைத்து
தினம் உனைப் பூசிப்பேன் நான்.

**மகன் - வசந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க இயலவில்லை

மாமியென வந்த மறுதாயே
மார்பில் சுமந்து – என் பிள்ளைகளை
சீராட்டி, செந்தமிழ் ஊட்டி
நாமும் பார்த்தெடுத்த நாயகியே

மகனெனவே போற்றி
நல் மலர்ந்த முகம் காட்டி
தம்பியென அழைத்து
தந்திடுவாய் நல்லமுதம்

என் செல்ல மகள் பெரிதானால்
செலவுக்கென நீங்கள் சேர்த்து வைத்த
செல்வ நிதி இங்கிருக்க
நீங்கள் சென்றதெங்கே காணாது?

என்னால் மறக்க இயலவில்லை
உங்கள் இன் முகத்தை
அன்னைக்கு அன்னையும்
என்னை அரவணைத்த தாயும் நீ

**உங்கள் பிரிவால் துயருறும்**
**மருமகன் - குணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் பாசத்தில் இலக்கணமாய் வாழ்ந்த மாமி

பண்பினில் பாசத்தில் வாழ்ந்த என் மாமி. அன்னையின் அன்பின் வடிவத்தில் நீங்கள். நாங்கள் சில ஆண்டுகள் உங்களோடு திருமலையில் வாழ்ந்த காலங்கள் மறக்க முடியுமா மாமி? அந்தக் காலங்கள் எப்போது மாமி காண்பேன்! பின் நாளில் என்னை கனடா அழைத்தீர்கள். தாய் தந்தை பாசத்தை உங்களிடம் கண்டேன். சில காலங்கள் ஒன்றாக இருந்து வாழ்ந்த போது நீங்கள் எப்படியான பிரச்சனையானாலும் "தம்பி! தம்பி! இப்படித்தான் செய்ய வேணும்" என சொல்வீர்கள். இனி எனக்கு யார் தான் தாயே துடுப்பாக இருப்பார்கள்.

மருமகனாய் நான் அடைந்ததற்கு காலத்தால் அழியாத செய்த கடமையேன நினைக்கிறேன். எனது உறவுகள் கனடாவில் இல்லாத வேளையில் பாசத்தில் வேஷங்கள் எதுவுமின்றி தேசங்கள் கடந்து வந்து கனடாவில் வாழும்போது உங்களின் பண்புகள் மாறவில்லையே தாயே. உயர்ந்த உள்ளத்தால் எதையும் சுமையென்று நினைந்து வாழ்ந்ததில்லையே.

எங்களோடு இருக்கும் காலத்தில் நீங்கள் என் நாவின் சுவையறிந்து இனிய உணவு வகைகளை சமைத்துத் தந்து எங்கள் உணவு ஆசைகள் அனைத்தையும் தீர்த்தீர்கள். இனி யார் தான் இவைகளைச் செய்வார்கள். ஏன் தாயே எங்களை பரிதவிக்க விட்டுச் சென்றீர்கள். இதை தாங்க முடியவில்லை. சிறுவயதில் இருந்தே எங்கள் குடும்பத்தோடு உறவாடினீர்களே. உங்களுக்கு வருத்தம் வந்து மாற்ற முடியாது என்றவுடன் ஒரு கணம் நிலை தடுமாறியது. ஆனாலும் உங்கள் உறுதியான வழிநடத்தலில் நாங்கள் துணிந்து நின்று சிகிச்சை செய்தோம். ஆனால் விதி விட்டு வைக்கவில்லை தாயே.

**உங்கள் பிரிவால் துயருறும்**
**ஆனந்தராசா (ஆனந்த்) மருமகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறாமல்!!!

அன்பு நிழல் ஈந்து – காத்த
ஆலமரப் பெரு விருட்ஷம்
ஐயகோ! சாய்ந்ததே!
இறுதியில் சொன்ன வார்த்தை
இதயத்தில் இறுக்கமாய் பதிந்து
இன்னும் என் காதில் ஒலிக்கிறது
"தம்பி பேரனைப் பேணி – காத்து
கவனமாய் இருங்கள் - விரைவில்
இணைந்திடலாம் எல்லோரும்"

ஊர் இல்லை, உறவில்லை
ஒருநாளும் கண்டதில்லை
உண்மைக் காதல் தனை ஏற்று
ஒன்றாக சேர்த்து வைத்த அன்னையே!
தம்பி, தம்பி என அழைத்து - எம்மை
தாபரிக்க கனடா அழைத்து
என்னை எதிர் பார்த்து இருந்த
அன்னையே போனதெங்கே??
உன் தடம் மாறாது
ஓயாது பயணிப்போம்.

**மருமகன் - றொகான்**
**நீர்கொழும்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# What a special Grandma

Grandma....
I thought of you with love today
But that is nothing new
I thought about you yesterday
And the days before that too
I think of you in silence
And often spoke your name
All I have are your sweet memories
And your picture in a frame
Your memory is my keepsake
With which I will never part
God has you in his keeping
I have you in my heart.

**Thank you**
**By your loving grandson**
**Vithusan Kunarajah**

**உலகிலலேயே மிக உயரமான மலை உச்சி.**
ஏவரெஸ்ட்..மலையாகும். இது திபேத்-நேபாளப் பகுதியில்உள்ளது.இதன் உயரம் 29,028 அடியாகும். இந்த உயரத்தை சர்ஜார்ஜ் எலரெஸ்ட் (1790-1866) என்பவர்.அடைந்ததால் எவரெஸ்ட் என்னும் பெயர் ஏற்பட்டது.

**உலகில் உயர்ந்த தலை நகரங்கள்.**
உலகில் உயர்ந்தஇடத்தில் அமைந்துள்ள தலை நகரங்கள். திபெத்தின் லாசா நகரும்.(3.684 மீ உயரம்) பொலியாவின் தலைநகரான லாபாஸ் (3.631 மீ-உயரம்.) என்னும் நகரமும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மா நீங்கள் போனதெங்கே?

அன்பாய் அரவணைத்து, ஆசையாய் முத்தமிட்ட
உங்கள் அன்பு முகம் போனதெங்கே?
செல்லப் பிரவீனா என்று – நீங்கள் செல்லமாய்
அழைத்த குரல் போனதெங்கே?

அம்மம்மா உங்கள் அன்பு கையால் ஆசையாய்
ஊட்டிவிட்ட மூலிகை மருந்தெங்கே?

கட்டி அணைத்து, தட்டிக்கொடுத்து கெட்டிக்காறி என
சொன்ன உங்கள் அன்பு வார்த்தைகள் கேட்ப்பதெப்போ?

When I go through my memories of you, it kills and I always question myself why did my sweet and my lovely ammama leave me and go away for a long sleep.
But I understand that it wasn't your fault, that God, thatha and your relatives calling you to join them.
But remember ammama
I still remember your beautiful face and I'll never forget you. I still love you my sweet ammama!

Thank you
By your loving granddaughter
**Piraveenaa Kunarajah**

**பேத்தி - பிரவீனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My ammama was a kind and caring person.
She was the best ammama that I ever had.
She would always take care of my family and me, but one thing she would always ask me was if I finished my homework and if I ate.
My ammama would always suggest what is best for me and advise me about things that were not good.
I love you ammama.

**Thank you**
**By: you're loving granddaughter**
**Abishana Kunarajah**

**அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் (1775-1783)** அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் (1776ல் பிரிட்டனின் பிடியிலிருந்து தங்களை சுதந்திரநாடாக பிரகடனப்படுத்திக் கொண்டன. அதனால் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே போர்மூண்டது முடிவில் அமெரிக்கா வென்றது.

**தொழில் புரட்சி (1760-1830)** உலகில் முதன் முதலில் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் புரட்சியின் வளர்ச்சியினால் ஐரோப்பிய நாடெங்கும் ஆலைத் தொழில்கள் பெருகின.அதன்பின் தொழிலாளர் இனம். தொழிலாளர் இயக்கம் ஏற்பட வழிவகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருவீர்களா?

சின்ன வயதினில் - நான்
செய்த குறும்புகளுக்கு
அன்னையிடம் இருந்து
காத்து அபயம் அளிப்பாய்.
முந்தானைச் சேலைக்குள்ளே
முடங்கிக் கிடப்பேன்.

அம்மம்மா என்னுடன் இருந்தால்
யாருக்கும் அஞ்சேன்
முதற்பேரனென — என்னே
இறுமாப்பு எனக்கு.

நாளும் அறிவுரைகள்
கவனம் கவனம் என - வெளி
போய் வரும் வரை
காத்திருப்பாய் எனக்காய்.

பாடசாலை செல்லும் வேளை
பார்த்து நட என உரைப்பாய்.

உயர் கல்வி கற்க — நான்
ஒட்டோவா செல்ல — உன்
முகத்தில் ஆயிரம் மின் குமிழின்
ஒளி மிளிரக் கண்டேன்.

கையில் இருந்த காசும் ஈந்து
கட்டி அணைத்து
முத்தமழை பொழிந்தாய்.

கடுகதியில் வந்த காலன்
உனைக் கவர்ந்து செல்ல
என் சிறகு ஒடிந்து
செயல் இழந்து நிற்க்கின்றேன்.

அம்மம்மா மீண்டும் வருவாயா
மேதினியில் என்னோடு???

**பேரன் - கிருபா**
**கால்ரன் பல்கலைகழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தெய்வம்

ஏன் எங்களை பிரிந்து சென்றீர்கள்
உங்கள் மீது உயிரையே வைத்திருந்தோம்
ஏன் கடவுள் மறந்து போனார்
ஒரு கடுமையான வார்த்தை கதைத்ததில்லை
நான் பாடசாலை விட்டு வந்தவுடன்
சாப்பிட்டதா? ரீயுசன் போனதா,
தனியா வீட்டில் இருந்தால் கதவு திறக்கக்கூடாதென
ரெலிபோனில் புத்திமதிகள் கூறுவா
கோயில் போவது நிறைய விருப்பம் அவாவிற்கு
எல்லா இடமும் வருவா.
அண்ணா யூனிவாஸ்சிட்டி போனது
அவாவிற்கு நல்ல புழுகு,
நெடுக எனக்கு நல்லா படிக்க வேணும்
அம்மா, அப்பா பாவம் குழப்படி செய்யக்கூடாதென
எந்த நேரமும் அறிவுரைகள் சொல்லுவா
என்ர அம்மம்மா எனக்கு முக்கியமானவர்
நம்ப முடியவில்லை
பார்த்த விழியுடன் காத்து நிற்கும்

My Ammama never talked hard or roudly with me. She would always be nice to me.

Ammamma inee angalai vittu povai andru nangal kanavil kuda ninachu parkavilai. Engal Ammama engal ulathil apavum erupa.

your loving granddaughter
**Keerthana Anandarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரவணைத்த அம்மம்மா

அன்பாய் ஆதரவாய் கதைகள் சொல்லும் அம்மம்மா
என்னை அன்பாக அழைப்பீர்கள் சுமித் என்று
ஒரு வருடம் முன்பு என்னை காண இலங்கை வந்தீர்கள்
என்னை முத்தம் தழுவி போனீர்கள்
ரெலிபோனில் குளப்படி செய்யக் கூடாது
நல்லா படித்து நல்ல மாக்ச எடுத்து
காட்ட வேணும் என சொன்னீர்கள்
அம்மம்மா நான் கனடா வரவில்லை
என கவலை அடைந்தீர்கள்
நாங்கள் உங்களிடம் வந்துவிடுவோமென
எண்ணியிருந்தோம் அம்மம்மா
முடியவில்லையே உங்களை நினைந்து தவிக்கும்

**பேரன்**
**சுமித் ரோசன்**
**நீர்கொழும்பு**

My Grandma was a nice person.
When I came to Canada my ammama spent her time taking care of me and also taught me good behaviours and good manners.
Now I am looking for my grandma.
I will always love her and miss her.

Thank you
**By your granddaughter**
**Subani Rohan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா திருவுருவே என் இதயம் உம்மிடம் உள்ளதுவோ இரத்தினாவே?

என் ஆருயிர் உடன் பிறப்பே எங்கே சென்றீர்!
என் இதயம் உம்மிடம் உள்ளதுவோ என் நேரமும்
பெரியக்கா பெரியக்கா என்ற பாசமுகம் எங்கே எங்கே
இரத்தினாவே உன் அன்புச்சிரிப்பு போனதெங்கே
என் உடன்பிறப்பே மீண்டும் நாம் உன்னை எப்போ காண்போம்

என் கற்பனைகள் எல்லாம் கனவாய் மாறியது
ஒன்றாய் ஒருதாய் வயிற்றில் கருவாகி
நற்பண்புசார் நல்லபிள்ளைகளாய் ஊருக்குள் கூடிவாழ்ந்தோம்
ஒன்றாய் கூடியே வெந்ததை உண்டு மகிழ்ந்திருந்தோம்
உனைபறிகொடுத்த பாவியாய் பரிதவிக்கின்றோம் எல்லோரையும்
நன்றாய் உபசரிக்கும் நற்பாங்கை இனியாரிடம் நாம் பார்ப்போம்

என் உயிர் இரத்தினாவே எனக்காய் மீண்டும் ஓருபிறவி
எடுத்துவரமாட்டாயோ இவ்வுலகில் உன்னை
நேசித்த இதயங்களின்
கண்ணீரை துடைக்க ஒரு கணமாவது வா
என் இரத்தினாவே
அப்போ உன் நினைவோடு பலயுகம் வாழந்திடுவோம்

**இரத்தினாவே.. உன் நினைவோடு**
**பெரியக்கா சரஸ்வதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிந்து செல்ல எப்படி மனம் வந்தது

என் அன்புத் தங்கையே பாலகராய் நாம்மிருந்தவேளை
பாரினிலே எம்மை பரிதவிக்கவிட்டு
பரலோகம் எம் அம்மா சென்றபோதும்
கனமான குடும்ப சுமையை
நாம் சேர்ந்தே சுமந்திருந்தோம்
என் கூட நீயிருந்து அக்கோய் அக்கோய் என்று
நொடிக்கு ஆயிரம் அக்கோய் சொல்வியே இரத்தினா!
நீ எனக்கு அறிவுரையும் புத்தியும்
பலகதையும் சொல்வியே இரத்தினா!
என்னை பிரிந்து செல்ல எப்படி மனம் வந்தது
உன் வாழ்விடங்கள் எங்கொங்கோ இருந்தபோதும்
என்னைத் தேடி ஓடி வருவாயடி என் அன்புத் தங்கையே
உன் பாசத்தை எண்ணி மனம் வெதும்புகின்றேன்
உன் உடன்பிறப்பு என்று சொல்லிக்கொள்ள
வன்னி மண்ணில் நானொருத்தி இருந்தபோதும்
வராமல் என்னைப் பாராது ஓதுங்காமல்
வாஞ்சையுடன் ஓடிவந்தாய் இரத்தினாவே
அது கடைசி வருகையாக இருக்குமென்று
நான் கனவிலும் எண்ணவில்லை

நீ என்னைக் கட்டியணைத்து கொஞ்சிவிட்டு
கனடா பயணம் சென்றபோது
கண்களில் நீர் பனித்ததை நாம் இருவருமே
நினைக்கவில்லை அது நிரந்தர பிரிவு என்பதை
இப்போ உன் முகம் பார்த்து கட்டியழவும் முடியாமல்
இரத்தினா உன்முகம் காணா பாவியாகிப்போனேன்
இவ்வருடம் ஆடிமாதம் வட்டக்கச்சி வந்து
இன்புற்று என்னுடன் கதைத்து அளவளப்பாய் என்றிருக்க
உன் வரவை ஆவலுடன் பார்த்திருந்த வேளை
துயரச் செய்தியே ஏன் காதுக்கு எட்டியது
எப்படி இரத்தினா தாங்குவேன்
என்னை விட்டுப் பிரிந்து செல்ல
எப்படி மனம் வந்ததுனக்கு இரத்தினாவே
உன் தன் நினைவுகளோடு என் கண்ணீரைக்
காணிக்கை ஆக்குகின்றேன்.

**உன் ஆசைஅக்கா முருகேசு பராசக்தி**
**வட்டக்கச்சி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அக்கா...அக்கா என் இரத்தினம் அக்கா..

அக்கா..அக்கா என் இரத்தினமக்கா எங்கே..!எங்கே..!
எங்கே..!எங்கேயக்கா? நீ போனாய் அக்கா..!
நினைவுகளை..கனவாக்கி..நிம்மதியையளித்து விட்டு
அக்கா இரத்தினமக்கா..நீ..! எங்கே..! சென்றாய்..!

இரண்டு அக்கா தம்பி இரண்டு
தங்கை இரண்டு அண்ணா ஒன்று..என்று
அன்று நீ எனக்கு சொன்ன வார்த்தை
இன்று உடன்பிறப்புக்களை தேடுதக்கா..
நான் தாய்முகத்தை பார்த்ததில்லை
உன் முகத்தைபார்த்து பார்த்து வளர்ந்தேன்
அக்கா..அக்கா தாயக்கா நீ எனக்கு

தாயகத்தைவிட்டு நான் அந்நியதேசம்
தேடிவந்தபோது பணமெனக்கு தந்தாயக்கா
தாரமொன்று உனக்கு வந்தபோதும்-நீ எனக்கு
தூரப்பாசம் காட்டாமல் தாய்ப்பாசம் காட்டியே வந்தாயக்கா..

உறவுகள் என் உடன்பிறப்பு என்னருகே இருப்பதற்கு
எத்தனை காலம் நான் பாடுபட்டேன்.. அத்தனையும்
நீ அறிவாய் நான்அறிவேன்.. யார்அறிவாரோ.
அத்தனையும் சேர்ந்து வாழும்போது உறவழிந்து போவதோ..

ஆருடங்கள் பலகூறி ஆண்டவனே அழித்தாலும் எங்கள்
அன்புக்கோட்டை தாய்ப்பாசம் என்றுமே அழியாதக்கா..
நீ செல்லுமிடம் சொர்க்கமக்கா.. அக்கா நீ சென்று வா!
என் இரத்தினமக்காவே! நீ சென்றுவாதாயே..! சென்று வா!

**உடன் பிறந்த சகோதரன்**
**தம்பி துரை**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவிலேனும் திரும்பி வந்து எங்கள் கவலைதீர்க்காயோ இரத்தினம் அக்காவே

அன்பின் திருவுருவே பாசத்தின் இலக்கணமே என் அன்பு அக்கா
காலமெல்லாம் எமை கண்ணீரில் நனையவிட்டு எங்கு சென்றிர்கள்
அன்னை முகம் கண்டதில்லை அரவணைப்பும் நானறியேன் உந்தன்
முகம் கண்டதனால் அதற்கோர் குறையுமில்லை எந்தை மறந்து
என் இனிய வாழ்வுதனை எளிதாய் கழிக்கையிலே எமைவிட்டு எங்கு
சென்றிர்கள் ?

என்னை வளர்த்தெடுத்து இவ்யுகத்தில் நன்றெ நாம்
வாழ நற்சிந்தனை பலகூறி என்ன குறும்பு நான் செய்திடினும்
ஏற்று அரவணைத்து அன்னைபோல் எந்தனுக்கு அரியபுத்தி
பல புகட்டி
வாட்டும் தலைவலியில் வாடிவிழும்போதும் ஓடிஉபசரித்து
ஒத்தடங்கள் பல தந்து ஊனைஒறுத்து உறங்காது காத்திடுவாய் .

எனக்கு சின்ன சின்ன வலிவரினும் சிந்தைகலங்கிடுவாய்
அன்னை உருவெடுத்த அக்காவே எமைவிட்டு
தொலைதூரம் சென்றதெங்கே எமையெல்லாம் அன்போடும்
பண்போடும் பாசத்தோடும் பேணி மணநாள்வரை
கூடி வாழ்ந்த ஞாபங்கள் நினைவுகளாய் வந்து போகுதக்கா

ஆண்டுகள் பல கழித்து உங்கள் மலர்முகத்தை கண்டபோது
நான் மழலையான போதில் காலை மாலை தென்றல் காற்றாய்
சின்ன சின்னவயதில் துள்ளி திரிந்த ஞாபகங்கள் உங்கள்
பாசமுகத்தில்கண்டேன் என் உயிர் அக்காவே
உச்சிமுகர்ந்து உங்களை வாரிஅணைக்கையிலே உங்கள்
உயிர் இவ்வுலகை விட்டு போனதனை நினைக்கையிலே
நெஞ்சு வெதும்பி விம்மி விம்மி அழுகைவருகுதக்கா
கனவில் எனும் திரும்பிவந்து என்கவலைதீர்க்காயோ
இரத்தினக்காவே என்றும் உங்கள் நெஞ்சோடு நிழலாடும்.

**பாசமுள்ள தங்கை**
**சீதா நாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ஆசை மைத்துனியே எங்கிருந்தாலும் வாருங்கள்

மைத்துனியே என் ஆசை மைத்துனியே- என்
மாமிமுகம் உங்கள் முகமென்பார் என் கணவர்
மாமியாய் மைத்துனியாய் உங்கள் முகம் பார்த்து வந்தேன்..
மச்சாளே என் கண்முன்னே நோயென்று நீங்கள் படுத்ததில்லை..
புற்றுக்குள் பதுங்கும் கொடிய விசப் பாம்பைப்போல்-உங்கள்
கழுத்துக்கள் கொடிய நோயொன்று பதுங்கியதோ.
நான் நினைத்தேன் நீங்கள் மெத்தையிலும் கட்டிலிலும்
பிள்ளைககள் பேரப்பிள்ளைகள் பெறாமக்கள் மருமக்கள்
மைத்துனர் மைத்துனிகளோடும் உடன் பிறப்பு உறவுகளோடு
பேசிப்பழகி கவலையெல்லாம் தீர்ப்பீரகளென்றிருந்தேன்
மைத்துனியே சத்தியமாய் கனவிலும் கூட நான்
நினைக்கவில்லை..கடுகதியாய் கொடியநோய் கொல்லுமென்று
பழகிய நாட்களெல்லாம் பண்போடு பகிடிவிட்டு பேசி வந்தீர்கள்
பப்பா எம்மை விட்டுபிரிந்த போது பக்கத்திலிருந்து
எனக்கும் அம்மாவுக்கும் ஆறுதல் கூறினீர்களே..
இன்று உங்கள் பின்ளைகளுக்கு சொல்ல வைத்து விட்டீர்களே..
என்ஆசை மைத்துனியே எங்கிருந்தாலும்
எழுந்து வாருங்கள்
என்றும் நாங்கள் இணைந்து வாழ்வோம்..

**ஆசை மைத்துனி சுமதி- கனடா**

**இந்தியாவின் எல்லைகள்**

**வடக்கே** - இமயமலை, சீனா, திபெத், நேபாளம், பூட்டான்

**கிழக்கே** - வங்காளவிரிகுடா,பர்மா,பங்காளதேஸ்

**மேற்கே** - பாகிஸ்ததான், தென்மேற்கே-அரபிக்கடல்.

**தென்கிழக்கே** - வங்காள விரிகுடா.
தெற்கே-இந்தியப் பெருங்கடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை குலமகளாய் வந்த மைத்துனியே

தம்பிக்கு வாய்த்த தானைத் தலைவி
தாயைப் போல பார்த்ததை அறிவோம்
மாறா நோயினால் பாரிசில் வீழ்ந்த போது
மறு கணம் ஏகி கொண்டுவந்திங்கு
பூப்போல் பார்த்த புண்ணிய வதியே !
பேர் சொல்லி அழையா பெருந்தகை நீ
சீமையில் சேர்த்த பொன், பொருள் ஈந்தாய்
யாரினை நம்பி நாமினி வாழ்வோம்???

**மச்சாள்மார் நாகம்மா, செல்லம்மா**
**கிளிநொச்சி**

## உடன் பிறவா சகோதரர்கள் மற்றும் மைத்துனர்கள், மைத்துனிகள் புலம்பல்

உறவெனக் கண்டால் ஓடிவந்தணைப்பாய்
உபசரித்து அணைத்து உண்டியும் அளிப்பாய்
ஆற்றொணா எம் துயர் அறிந்தால்
அனலிடை அகப்பட்ட புழுவாய்த் துடிப்பாய் - எம்
மகிழ்வினைக் கண்டால் மலர்ந்து சிரிப்பாய்
உற்றது, பட்டது உண்மையோடு பகர்வாய்
வயப்படா நாணமொடு, வாய்த்த நல் சிரிப்பு —
இனி காண்பது எங்கே? காவியத் தாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைக்கையிலே நெஞ்சுருகி நீரோடிப் போகுதம்மா..!

எங்கள் இனிய அன்ரியே உங்களோடு வாழ்ந்த ஒவ்வொரு
மணித்துளியும் இவ்யுகத்தில் நாம் வாழும் காலம்வரை எங்கள்
நெஞ்சங்களில் நீங்கா நினைவுகளாய் மலர்ந்திருக்கும்

ஆழக்கடல் நடுவே அமைந்த நெடுந்தீவில் பிறந்த
கணபதிப்பிள்ளை துணையோடு குணபதி சின்னம்மா
பெற்றெடுத்த குலமகளே எங்கள் அன்பான அன்ரியே
வட்டக்கச்சியின் இரத்தினமே திருவையாற்றின் தங்கமே
குடும்பத்து குலக்கொடியே எங்கள் தங்கலட்சுமியே
எமையெல்லாம் சீராட்டி பாராட்டி சிந்தைகலங்காமல்
சிறப்பாய் பேணிக்காத்த அன்ரியே உங்களோடு நாம் வாழ்ந்த
காலம் தனை நெஞ்சில் நிறுத்தி நினைத்து பார்க்கையிலே
உங்கள் ஞாபங்கள் இறுநீறாய் கருகி காற்றோடு போகுதம்மா
நெஞ்சமெல்லாம் நினைவிழந்து வாடுதம்மா!

உங்களோடு கூடி குதுகுலமாய் இருந்த நாட்களை
நினைக்கையிலே நெஞ்சுருகி நீரோடிப் போகுதம்மா
சித்தப்பாவுடன் பெருமிதமாய் பேரன்போடு
உலாவந்த காலமெல்லாம் கனவுகளாய் வருகுதம்மா
பெரியக்கா பெரியக்கா ! என்று கூப்பிட்ட குரல் எங்கே?

மருமகன் கலா ராசன் செல்வன் தவத்தார் என கூப்பிட்ட
குரல் எங்கே எங்கே? றூபி சாந்தி தர்சினி என்று
கட்டி அனைத்த உங்கள் கரங்கள் எங்கே எங்கே?

சிறியோர் பெரியோர் உற்றார் உறவினர் கற்றார் கல்லாதார்
எல்லோரையும் உளமாரநேசித்து ஒன்றாய் அரவணைத்து
அன்புகாட்டி ஆலவிருட்சமாய் சாலப்படர்ந்து உன்னதமாய்
வாழ்ந்த அன்ரியே எமைவிட்டு எங்கு சென்றீர்கள்

பெற்ற பிள்ளைகள் நான்கும் நாற்திசையும் கதறியழ
உற்ற மருமக்கள் ஊரெல்லாம் சொல்லியழ
பேரன் பேத்தியெல்லாம் விம்மி விம்மியழ
உடன் பிறந்த சகோதரர்கள் ஊரோடு கூடியழ
பெறாமக்கள் நாமிங்கு உங்களைத் தேடியழ
எமைவிட்டு நெடும்பயணம் எங்குசென்றீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சுற்றத்து முற்றமெல்லாம் செழித்திருக்க
ஊரும் உறவுமாய் கூடி வாழ்ந்தவர் நீங்கள்
ஈழவிடுதலையின் இலட்சிய வேங்கைகளை நேசக்கரம் கொண்டு
பாசமாய் அணைத்தவர் நீங்கள் தந்தை தம்பி என்று ஊரோடு
இறைத்த கண்ணீர் ஈழவேரோடு ஊறி ஆலவிருட்சமாய் ஈழம்
மலரும் காலம்வரும். அதை நீங்கள் தானமாய் ஈந்தளித்த விழிகள்
பார்க்குமம்மா அதுவரை உங்கள் நினைவுகள் எமைவிட்டு நீங்காது

காலக்கொடுமைக்கு காலன் தான் என்ன செய்வான்
நேரம்பார்த்து கட்டிதடியில் மெல்ல ஊடுருவி
புற்றுநோயாய் வந்து உயிரை குடித்து உறவின் பிரிவுதனை
ஊருக்கு உணர்த்திவிட்டான் நேசம் வைத்த அன்றியே
பாசக் குலக்கொடியாய் குடும்பத்து குலவிளக்காய்
மீண்டும் எங்கள் அன்ரியாய் வந்து பிறக்கவேண்டும்
எங்களோடு ஒன்றாய் கூடி வாழவேண்டும்

**உங்கள் நெஞ்சங்களில் நீங்காத நினைவுகளாய் நிற்கும் பெறாமக்கள்.**
**மருமகன் செல்வா, கலா, ராசன் றூபி,**
**செல்வன், சாந்தி (டென்மார்க்.)**
**தவம், தர்சினி- (கனடா ) குடும்பத்தினர்**

---

புதன்கிரகம்-.சூரியனுக்கு அருகில் இருப்பது கிரகங்களில்சிறியது 88 நாட்களில் சூரியனை சுற்றி வருகின்றது.
புளூட்டோ-சூரியனுக்கு மிகத் துூரத்திலிருக்கும் கிரகம்,4லட்சம்கோடிமைல்

Nomads- நாடோடிகள்.
Natural Barriers-இயற்கைத் தடைகள்.

**ஏழ்பிறப்பு**:- தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம்.
**கோள்களில் பெரியது**:- வியாழன்.

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாசத்துக்குரிய சின்னன்னையே

என்றும் எம்மை அரவணைத்து அன்பு முத்தமிட்டு தாலாட்டுப்பாடி
தூங்க வைத்த எங்கள் சின்னன்னையே இன்று நீங்கள்
நிரந்தரமாய் தூங்கியதேன் சோகம் தாங்க முடியவில்லையே..!
எங்கள் குலரத்தினமே இரத்தினமாய் மின்னிடும் ஒளியே
உங்கள் பிரிவால் ஒளியிழந்த விழிகளாய் தவிக்கின்றோம்.
நெஞ்சுபொறுக்கவில்லை உங்கள் கடைசி ஊர்வலத்தையும்
காணக்கொடுத்து வைக்கவில்லையே

அன்பு பாராட்டும் மாமியே உறவுபோற்றும் சின்னன்னையே
எங்கள் குல அன்னை சக்தியின் தங்கையே கல்விக்கரசியின்
சகோதரியே காவியநாயகியின் உடன்பிறப்பே. உங்கள்
திருவதனம் கண்ணிற்குள்ளே நிற்கின்றது உங்கள் நேசமொழி
காதுகளில் கேட்கிறது நம்பமுடியவில்லை உங்கள் பிரிவின்
தகவல் கேட்டதும் வாடிநிற்கின்றோம்

தொலைபேசி ஊடாக சுகமாக இருக்கின்றீர்களா
என்று நீங்கள் கேட்கும் பாசமொழியை எப்பிறப்பில்
கேட்பது அப்பம்மாவே சின்னச் சின்ன குறும்புகள்
நாம் செய்திட சிரித்தபடியே உங்கள் முகம்பூரிப்படைவதை
எப்பிறப்பில் காண்பது எம் அப்பம்மாவே

**உங்கள் பிரிவால்வாடும்**
**பெறாமகன் வரன் குடும்பம்**
**சாந்தன்**
**சுவிஸ்லாண்ட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமையாய் வந்த மாமியே!

ஆசையாய் வந்துதித்த அரிய மாமாவுக்கு
வாசுகியென வாய்த்த திரு மாமி
நாளும் எனை அழைத்து நலம் அறிவாய்
என் அன்புக்கணவன் அகாலமாய் போக
ஓடிவந்தணைத்து ஒத்தடங்கள் தந்தாயே
நேராத நோய் நேர்ந்ததென அறிந்து - ஓடி
வந்தேன் ஒன்றுமில்லை போவென்றனுப்பி வைத்தீர்
வந்த களை மாறுமுன்னே வாசுகியே சென்றதெங்கே?

**மருமகள் உதயகுமாரி**
**London**

உலகின் முதன் செயற்கை கோளின் பெயர். ஸ்புட்னிக், அதை ரஸ்சியா முதலில் 04-10-1957 அன்று பூமியை சுற்றிவர ஆனுப்பியது.

செயற்கைக்கோள் மூலம் பூமியைச்சுற்றிய முதல் மனிதன். பிளைட் மேஜர்யூரிகாகரின்என்பவர் இவர் ரஸ்சியாவை சேர்ந்தவர். 12-04-1961 அன்று பூமியை சுற்றி வந்தாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமையான நினைவுகள்

நாம் வளர உறுதுணையாய் நின்றீர்கள் அன்ரி
எம்மை தாலாட்டி, சீராட்டி தோளில் சுமந்து வளர்த்தீர்கள்
உங்கள் அன்பை பாசமழையாய் பொழிந்தீர்கள்

அன்ரி நீங்கள் எம்மைத்தேடி வரும்வேளை
ஓடி அழைத்திடுவோம் கேற்றடியில்
உங்கள் கதை கேட்க காதைக் கூராக்கி
அருகே ஒட்டி அமர்ந்திடுவோம்
பள்ளி லீவில் திருவையாறு அன்ரி வீடு செல்ல
எம் எல்லோருக்கும் ஆசை பொங்கும்
உயர்வான உங்கள் குணத்தை
வாழ்ந்த நாளில் கண்டு அனுபவித்தோம்
ஒரு சிறு சுடுசொல் கூட பேசவில்லை அன்ரி
வன் சொல் ஒன்று எழுதி எம் மனதை
நோகடிக்கவில்லை
எப்படி அன்ரி உங்களை நாம் மறப்போம்
உயிர் தான் உங்கள் உடம்பை விட்டு பிரிந்தது அன்ரி
ஆனால் உங்கள் செயல்களால் நீங்கள் பொழிந்த
பாசமழையால் உன் நினைவுகள் எம் நெஞ்சில்
என்றும் பசுமையாய் நிலைத்து வாழும்.

ஒருவன் உயிருடன் வாழ்வது இறைவன் செயல்
இறந்தும் வாழ்வது அவரது செயல்

சந்திக்கும் போது அன்பான வார்த்தையை பரிமாறிக் கொள்ளுங்கள். ஏனெனில் அதுவே கடைசி சந்திப்பாகக் கூட இருக்கலாம்.

**பெறாமகள்**
**மதி றூபன்**
**ஆசிரியர்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நெஞ்சில் நிறைந்த பெரியம்மா

பெரியம்மாவே உங்களையும் தானே
நம் அன்னையின் உருவில் இன்றுவரை நாம்
பார்த்திருந்தோம்
அன்று நாம் அன்னையை இழந்து பரிதவித்து நின்றபோது
எம் ஐவரையும் உங்கள் மடிதாங்கி ஆறுதல்படுத்திய
எங்கள் பெரியன்னையே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து நாட்கள் 31 ஆனதுவோ
நம்ப இயலவில்லை இன்னும் தான் எமக்கு.
கண்களை வெட்டிவெட்டி விழிக்கின்றோம் இது யாவும்
கனவாகக் கூடாத என்று
விழிக்கும் கண்களின் முன் மலர் மாலையுடன்
சிரித்திருக்கும் உங்கள்
பூமுகம் தான் கண்ணில் பட்டு நிஜத்தை உணர்த்துகின்றது
மாதங்கள் கடந்து வருடங்கள் ஆனாலும் அகலாது
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு – உங்கள் நினைவுகள் தான் எம்மிடம்
நிஜத்தில் நீங்களோ ஆண்டவன் சன்னிதானத்தில்
கலையாத் துயில் கொண்டிருக்கும் உங்கள் பாதங்களில்
கண்ணீர் துளிகளாலே நம் ஆரதனை

**பெறாமக்கள் (குலசிங்கம் குடும்பம்)**
**குகன், கரன், சத்தியசீலன், சசன், பிரதீபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Those whom God loves the best are those who suffer the most."

When we face difficulties in life, we often lose sight of who we are.
Our aunt was someone who was able to overcome these struggles without ever losing faith, something only a person with true courage can do.
She was humble, strong-willed and considerate.
She would cherish and nurture you as if you be her own child.
She was pious and dependable and always made the needs of others her priority.
In the end, we believed that God had put her through something that even someone of her character could not face. However, we were wrong because this time it was not her who was challenged but it was the ones who loved her the most.
Now it is time for us to be just as strong and courageous as she was and keep constant faith in ourselves.
We will forever reminisce in the memories of her life.
Rest in Peace.

With Love,

**Rushany Ayathurai**
**Rubaney Ayathurai**
**Thurcya Ayathurai**
**Sainee Ayathurai**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி பேரம்பலம் தங்கலட்சுமி அவர்கள்
# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

அமரர் திருமதி பேரம்பலம் தங்கலட்சுமி அவர்கள் சிறந்த பண்பான, தாராள சிந்தனை நிறைந்த ஒரு அன்னையாராக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். இவர் எமது கல்லூரியுடன் நெருங்கிய தொடர்புடையவர். ஏனெனில் இவரது முதல் பேத்தி செல்வி பிரவீணா குணராஜா மற்றும் இளைய பேத்தி செல்வி கீர்த்தனா ஆனந்தராஜா மற்றும் மருமகள் துர்சியா ஐயாத்துரை ஆகியோர் எமது கலைக்கல்லூரி மாணவர்கள், ஆகையால் எங்கு எந்த நிகழ்வு ஆயினும் பங்கு பற்றி தனது கருத்துக்களை அன்பாகப் பேசி முன் வைக்க தயங்குவது இல்லை. நாமும் அவரிடம் அன்பும், மதிப்பும், பாசமும் கொண்டிருந்தோம்.

அவர் வாழும் காலத்தில் ஒரு சிறந்த குடும்பத் தலைவியாகவும், பிள்ளைகளுக்கு சிறந்த தாயாகவும், சகோதரர்களுக்கு பாசமுள்ள சகோதரியாகவும், உற்றார் உறவினருக்கு உதவி வேண்டிய நேரமெல்லாம் உதவி புரிபவராகவும், வாழ்ந்து வந்தார். தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையுடன் பேசி அவர்களுக்கு சிறந்த அறிவுரை கூறி வழிநடத்தியவர். பல கனவுகளைத் தன்னுள் வைத்திருந்து செயல்படுத்த எண்ணிய காலத்தில் இப்படியொரு கொடிய நோயால் பாதிக்கப்பட்டு எம்மை விட்டு பிரிந்து விட்டார். இவர் மீது அளவில்லா பாசம் கொண்டிருந்த பேரப்பிள்ளைகள் மிகக் குறுகிய காலத்தில் இவரை இழந்து பட்ட வேதனை சொல்ல முடியாதவை. இவரது மறைவு இவரது குடும்பத்தாருக்கு மட்டுமன்றி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி சாந்தி.

**கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி**
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு கிழக்கில் பிறந்து வட்டக்கச்சியில் வாழ்ந்து
கனடாவில் மறைந்த
திருமதி. பேரம்பலம் தங்கரத்தினம் அவர்கள்

**நற்கதி பெறப் பிரார்த்தனை**



மண்ணில் நம் வாழ்க்கை குறுகியது. அந்த வாழ்க்கையின் அளவை இறைவன் தீர்மானிக்கிறான். வாழும் காலத்தில் வாழும் வகைகளை மனிதர் தீர்மானிக்கின்றனர். இன்பமும் துன்பமும், பகலும் இரவும் மாறிமாறி வருவது போல இறப்பும் பிறப்பும் அமையும் என்பது சைவசமய நம்பிக்கை. பெறுதற்கு அரிய மானிடப் பிறப்பை, பேறு மிக்கதாக ஆக்கிக் கொள்வோர் ஒரு சிலரே. அவர்களுக்குள் ஒரு பெருமை மிக்க தாய், அமரர் தங்கரத்தினம் அம்மா.

கள்ளம் கபடமில்லாத சாந்த சொரூபமான தோற்றத்துடன் இந்தத் தாய் துர்க்கேஸ்வரம் ஆலயத்திலே வழிபாட்டிற்கு வரும்போது பலமுறை கண்டிருக்கிறேன். துர்க்கை அம்பாளின் மேல் அவருக்கிருந்த அபரிதமான பக்தியை கண்டிருக்கிறேன். ஒரு தெய்வீகம் திருமதி. தங்கரத்தினம் அம்மாவில் இருந்தது. அவர்களின் குடும்பத்தில் இருக்கும் அனைவருமே உயர்ந்த எண்ணங்களோடும் தெய்வ பக்தியோடும் விளங்குவதற்கு தங்கரத்தினம் அம்மாவின் வழிகாட்டுதல் ஒரு காரணம். பெரியோர்கள் எப்படி நடக்கிறார்களோ அதைப் பார்த்துத்தான் சிறியவர்களும் செல்வார்கள். அவ்வாறு தாய்க்குத் தாயாக குடும்பத்துக்கு தலைவியாக தன் கடமையைச் செய்த ஒரு குடும்ப விளக்கு அணையாத தீபமாக அம்பாளிடம் சென்று அடங்கிவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பும் பிறப்பும் நம்வசம் இல்லை. இறந்தும் இறவாமல் எல்லார் மனங்களிலும் இருக்கும் இந்தத் தாய் அன்றுபோல் என்றும் நிலைத்திருப்பார். அம்பாளின் பாதக் கமலத்தில் இணைந்திருந்து தன் உற்றார், உறவினர்களைக் கண்டு கொண்டிருப்பார். அவர்களின் நன்மை தீமைகளில் கலந்து கொண்டிருப்பார். தெய்வமாக இருந்து ஆசீர்வதித்துக் கொண்டிருப்பார்.

ஆறுதல்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது ஒரு தாயின் பிரிவு. இப்பிரிவினால் ஆற்றொணாக் கவலை கொண்ட அவரின் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் துர்க்கேஸ்வரம் ஆலய பக்தர்கள், குருமார்கள், பணியாளர்கள் சார்பிலும் நமது நெடுந்தீவு மக்கள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன். துர்கேஸ்வரம் ஆலய மதகுருவாக, திருமதி பேரம்பலம் தங்கரத்தினம் அம்மாவுக்கு நற்கதி நல்குமாறு ஸ்ரீ துர்க்காதேவி அம்பாளைப் பிரார்த்தித்து வழிபட்டுப் கொள்கின்றேன்.

**துர்கேஸ்வரம் ஆலயப் பிரதமகுரு**
**சிவஸ்ரீ தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்**
**ஆலய குருமார்கள் - பணியாளர்கள் - பக்தர்கள்**
**துர்க்கேஸ்வரம், ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில்**

பிரதமகுரு
நெழுவினி பிள்ளையார் ஆலயம்
நெடுந்தீவு

பிரதமகுரு
கரமத்தை கந்தசுவாமியார் ஆலயம்
நெடுந்தீவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி







ஐயய்யோ செய்தி ஒன்று நாம் கேட்டோம் அது பொய் என்று இருக்கக் கூடாதா

மெய் என்று ஆனதடா அதுவே எங்கள் மூச்சை ஒரு கணம் அடைத்ததடா

எங்கள் இரத்தினா அன்ரியே ஏன் எங்களுக்கு இப்படி ஒரு இடியைத் தந்தாய் தாயே

பல தடவை மாமி மாமி என்று அழைத்த எனது உதடுக்கள் மவுனமித்து விட்டதே மாமி

அம்மா அம்மா என்று நீ பெற்ற பிள்ளைகள் கதற மாமி என்று மருமக்கள் தவித்திருக்க

அன்ரி என்று பெறாமக்கள் பரிதவிக்க உடன் பிறந்தோர் கண்ணீர் வடிக்க இரத்தினா
என்று உறவினர்கள் உனைத்தேட எங்கு சென்றாய் நீ நெடும்பயணம்

உங்கள் புன் சிரிப்பும் அடக்கமான பார்வையும் அன்பான அரவணைப்பும்
உங்கள் பரிவான விருந்தோம்பலையும் நாம் இனி காண்பதேப்போ
எதிலும் அவசரம் காட்டாத அன்ரியே
உங்களை அவசரமாய் அழைத்துச் செல்ல பாசத்துடன் வந்தானே காலதேவன்

அமைதியாய் உறங்கிட ஆண்டவனை பிராத்திக்கின்றோம்.

உங்கள் மருமக்கள் , பெறாமக்கள் , பேரப்பிள்ளைகள்

(டென்மார்க்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவு சுமந்து...

26 - 6 - 1950



30 - 03 - 2012

## திருமதி. பேரம்பலம் தங்கரத்தினம்

பொன்னிற அழகு மேனி
புனித நீறு அணிந்த நெற்றி
சந்திர மதியே ஆன – பெற்ற
தாயினை ஒத்த சாயல்.

அன்பு, அறம், அடக்கம்
அருளொடு நல்லாற்றல் பண்புநிறை
மாதர் குல திலக தங்கம் - எம்
குலத்துதித்த மங்கா புகழ் இரத்தினம் நீ.

வாடி வருவோர் வகை அறிந்து
ஓடி உபசரித்து உணவளித்து
நாடி பிடித்து நல் புத்தி சொல்லி
கூடி மகிழ்ந்துண்டு குறை களைவாய்

உறவென்றால் உயிர் உருகி நிற்பாய்
உண்மை உணர்வினால் ஓடிவந்தணைப்பாய்
துயரிலும், மகிழ்விலும் தோளீந்து நிற்பாய்
தூய அன்பினால் எமை ஆண்ட தாய் நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தி படு நிழல் போல
அன்னை முகம் கண்டாய்
அரவணைத்துக் காத்த - உயிர்
அண்ணனையும் பிஞ்சினிலே இழந்து
நொந்து பெரிய துயர் சுமந்தாய்.

பாதி வாழ்வினில் பதியை இழந்தும்
பக்க துணை நின்ற சகோதரர் இழந்தும்
விதியென நொந்து – வீழ்ந்திடாதெழுந்து
கனிவொடு மழலைகள் காத்து நின்றனை.

நீண்ட துயர் சுமந்த - நெடும்
பயணம் போதுமென்றா?
ஆண்டவன் உன்னை – அரை
வயதில் அழைத்துக்கொண்டான்.

போய்வா தாயே போய்வா!
சோகம் தொலைத்து - சொர்க்க வளிகண்டு
மீண்டும் இவ்மேதினியில் தங்கரத்தினமாக
எங்கள் குலத்துதித்து எளுந்துவர மாட்டாயா??

வட்டக்கச்சி நகர் அமர்ந்து
வாழ்வளிக்கும் வேல் முருகா
நின்னையே கதியென்றெண்ணி
தினம் நேத்தியும், பூசையும் செய்த
உத்தமியாள் தங்கரத்தினத்தை ஏற்று
பேரின்ப பேறளிப்பாய் ஐயா!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு, அவர்பிரிவால் துயருற்றிருக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, நாமும் அவர் தம் துயரத்தை பகிர்ந்து கொள்கின்றோம்.

**நீங்கா நினைவுடன்...**
**இரா. வயிரவநாதன் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மாண்ட சோலைக்குள் 26-06-1950 | தேவர்கள் சேனைக்குள் 30-03-2012

## திருமதி.பேரம்பலம் தங்கரத்தினம் (இரத்தினமக்கா)

**வட்டக்கச்சி – கனடா**

**நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, திருவையாறு,**
**கனடா ஸ்காபுரோவை வசிப்பிடமாகவும் கொண்ட**
**திருமதி பேரம்பலம் தங்கரத்தினம்**
**அவர்கள் 30.03.2012 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.**

உள்ளத்தால் உயர்ந்து,
உள்ளொளியால் பிரகாசித்து
எளிமையிலே, பண்பிலே, பரிபூரணத்திலே,
உதாரணத்திலே உயர்ந்து எல்லார் தயவையும் ஈர்ந்து
எப்பவும் எல்லோரையும் இனிது உபசரித்தீர்களே அம்மா!

மணவாளனை, மக்களை, மருமக்களை, பேரர்களை, உற்றாரை, உறவுகளை, ஊர்மக்களை பேரன்பால் வென்றவளே,
பெருமகிழ்வில் ஆண்டவளே உண்டோ உங்களுக்கோர் இணை இங்கு.
மனம் ஆறாத மக்கள் இங்கே, மலைச்சுமை அவலம் அனைவருக்கும், கவலையே உணவாக, நினைவே சுவாசமாக
தாயே, உங்கள் நினைவுகளை மறக்கமுடியாது அல்லலுறும் அன்பு உள்ளங்கள் ஏராளம். அமைதி கொள்ளவும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தொடர்புகளுக்கு

சத்தியவதனா ஆனந்தராசா (மகள் மருமகன்)
முன்னாள் முதலமைச்சர் செயலகம் நிர்மாணத்துறை திணைக்கள ஊழியர்
திருகோணமலை - 416-834-5219 , 416-431-5801

இராசையா முன்னாள் துறைமுக அதிகாரசபை ஊழியர் திருகோணமலை 0942622244 93
பேரன் கிருபாகர் (கிரேசி) ஒட்டாவா கார்ல்டன் யூனிவேர்சிற்றி 647-857-1042



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
26
-
06
-
1950



இறப்பு
30
-
03
-
2012

## திருமதி.பேரம்பலம் தங்கரத்தினம் (இரத்தினமக்கா)

பூவுலகில் வந்துதித்த புனிதத் தாயே
விண்ணுலகம் விரைந்து சென்றதேனோ
மலர்வதனச் சிரிப்பழகும், வழியுமன்பும்
திருநீற்றின் ஒளிதவழும் அழகுமுகம்
கலகலப்பாய் நகைச்சுவையாய் உரையாடும் நாவும்
கருணையொடு இரக்கமிகு கலந்த பண்பும்
புகழரிய தானதர்மங்கள் புரிந்திட்டதும்
அன்புகாட்டி அனைவரையும் பேணி வாழ்ந்த வாழ்வும்
நினைத்திட எம் நெஞ்சமெலாம் நிறைகிறதே
எமையெல்லாம் அணைத்திட்ட அன்புக் கரங்கள்
இன்று அசைவற்றுக் கிடக்கின்றன
அம்மா நீங்கள் பாரில் மறைந்திட்டாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் அழியாது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரை இழந்து தவிக்கும் அருமைச் சகோதர சகோதரிகள், பிள்ளைகள், மருமக்கள்,
உறவுகளோடு நாமும் இணைந்து கண்ணீர் அஞ்சலியையும்
அனுதாபங்களையும் சமர்ப்பிக்கின்றோம்

**நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



26.06.1950
மலர்வு

30.03.2012
உதிர்வு

## திருமதி.பேரம்பலம் தங்கரத்தினம் (இரத்தினமக்கா)

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, திருவையாறு
கனடா ஸ்காபுறோவை வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி.பேரம்பலம் தங்கரத்தினம் அவர்களின் மறைவு குறித்த
கண்ணீர் அஞ்சலி

அன்பே உருவானவர்.
ஆருயிர் கணவனுடன் உளம் நிறைந்து இல்லறம் புரிந்தவர்.
மருகர் மருகியரை தன் பிள்ளைகளாய் அரவணைத்தேற்றியவர்.
பேரச் செல்வங்களின் வாழ்வில் ஒளியானவர்.
உற்றார், உறவினர்கள், உடன்பிறப்புகள், ஊரார்கள்
நித்தமும் விசுவாசிக்கும் நற்கருமங்கள் புரிந்தவர்.
எல்லோருக்கும் இனியவராய் பல்லோரின் இதயத்தில் அன்பாய் நிரம்பியவர்.
நல்லறமாம் இல்லறத்தில் இனிதே வாழ்ந்தவரை இமைக்கணத்தில்
இழந்து துயர் தாங்க முடியவில்லை. குலத்தலைவி பிரிவினால் பெரும்
துயரம் பெற்றிருக்கும் குடும்பத்தினர்
சாந்தி பெற எம் ஆழ்ந்த துயர் பகிர்ந்து
இக்கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
கி/இராமநாதபுரம் மக்கள் ஒன்றியம் - கனடா
K/Ramanathapuram Makkal Onrium - Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



நிழலாய் நின்ற தெய்வம் - இன்று
நிம்மதியாய் உறங்குதம்மா!
ஈழத்து மண்ணிலே
இமயமலை அப்பா கணபதி கண்டெடுத்த இரத்தினமே
சின்னம்மா பெத்தெடுத்த தங்கமே – ரத்தினமே!
எம்மை காலமெலாம் கண்ணீர் சிந்த வைத்துவிட்டு
விடை பெற்றாயோ!
எளிமைக்கு இலக்கணமாய் வழ்ந்தீரே!
பேரம்பலத்திற்கு துணையாய் நின்றீரே!
இல்லறத்தில் நல்ல தாயாய் இருந்தீரே!
உடன்பிறந்தார்க்கு உயிரானீரே
உறவுகளிடத்தில் உன் பாசத்தைப் பொழிந்தீரே!

உள்ளம் குமுறுதம்மா!
உறவுகளைக் கண்டவுடன்
கை நீட்டி அணைத்து முத்தமிட்டு
உன் கையால் நாடியை தடவிவிட்டு
விரல் நுனியால் காதோரம் முடியை எடுத்துவிட்டு
அணைத்துப் பிடிப்பாயே அன்றியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம்அக்கா என் இரத்தினம்அக்கா



என்னை வயிற்றுனுள் சுமந்து வந்த
தாய் முகத்தை இன்றுவரை நினைத்தாலும்
என்தாய் முகமோ நினைவில் இல்லை...
பால்குடி பருவமதிலிருந்து பத்துவயதுவரை
நாலக்கா எனக்கிருந்தும் நீண்ட நெடுங்காலம்
உன் நெஞ்சினிலே நான் வளர்ந்தேன்...
தாயாக நீயிருந்து என்னுயிர் வாழ்வதற்கு
தவறாது தயங்காது பணிசெய்திட்ட அக்காவே
உன் முகத்தை என் வாழ்நாளில் மறப்பேனோ...
நான் நானாக வந்தபோதும் என் வாழ்நாளில்
உன் பணியை உன்னை நினையாத நாட்களில்லை
இரத்தினம் அக்காவே என் உடன்பிறப்பே...
உன் வாழ்நாளில் நீ பட்ட கஸ்டங்கள்
எத்தனை எத்தனையோ அத்தனையும் எழுத
என் இதயம் துடிக்குதக்கா என்னால் முடியவில்லை...
என் கண்கள் குளமாகி கைகள் தடுமாறுதக்கா.
உள்ளம் உறைந்து உடம்பெல்லாம் குளிருதக்கா.
காகிதத்தில் எழுதிவிட்டால் கவலைதான் தீர்ந்திடுமோ?
என்ற கேள்வியும் என்னை கொல்லுதக்கா...
கொடிய நோயொன்று வந்து கடுகெதியில் உங்களை
கொன்று விடுமென்று கனவிலும் நாம் நினைக்கவேயில்லை
தண்ணீரில் வரைந்த சித்திரமாய் போனதக்கா உன்பிரிவு...
இறைவன் உன் வரலாற்றை மாற்றிவிட்டான் அக்கா
நீ முடிவில்லா நீரோடையில் இணைந்து விட்டாயக்கா
நாம் கண்ணீர் விட்டழுதாலும் நீ திரும்ப வரமாட்டாய். தெரியும்...
ஓடும் நீரோடை என்னைத் தேடி வரும்போது அக்கா
சத்தியமாய் உன்னோடு வந்து நானும் சங்கமிப்பேன்
இது சத்தியமக்கா.. என் இரத்தினமக்கா.

04-04-2012

உன் உறவோடு வாழும் தம்பி
துரை-குடும்பம்.
Central Driving School

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1996ல் குடும்பத்தினருடன்



2004ல் அம்மாவுடன் பிள்ளைகள்



2009ல் சகோதரங்களுடன் எடுக்கப்பட்டது.



2005ல் சகோதரியுடன் இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செப் 2004ல் இலங்கையில் குடும்பத்துடன் எடுக்கப்பட்ட படம்



01-01-2012 குடும்பத்துடன் குதூகலிகமாக களித்த நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின்
அளவுகோலாய் அறத்தின் வழிநின்று
அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் சிறப்புற வாழ்ந்து
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்து
நெஞ்சில் நீங்காத நினைவுகளைத்தந்து ஆறாத்துயரில்
ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்பு அன்னை..!

**அமரர் திருமதி பேரம்பலம் தங்கலட்சுமி**

அவர்கள் சிவபதம் எய்திய
செய்தியறிந்து எமது இல்லத்திற்கும் வைத்தியசாலைக்கும்
வெளிநாடுகளில் இருந்தும் நேரில் விரைந்து வந்தும்
தொலைபேசி தொலைநகல் ஊடாகவும் அனுதாபச்செய்தி
அனுப்பியும் நாங்கள் துயரத்தில் இருக்கையில் மன
ஆறுதல்கூறி உணவளித்தோர்க்கும் மண்டபத்திற்கு வருகை
தந்தும் இறுதிக்கிரிகையில் கலந்து மாலைகள்
மலர்வலையங்கள் கண்ணீர்அஞ்சலிகள் இரங்கலுரைகள்
ஆற்றியோருக்கும் தேவார திருமுறைகள் ஓதியோருக்கும்
குருமாருக்கும் அறிவித்தல்களை வெளியிட்ட பத்திரிகை
வானொலி தொலைகாட்சி மற்றும் மலர் ஆக்கத்திற்கு
உதவி செய்த இரா.வைரவநாதன் அவர்களுக்கும் J J
அச்சகத்திற்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் எமது
அன்னையின் 31நாள் அந்தியேட்டி கிரிகையிலும், கனடா
ஐய்யப்பன் இந்து ஆலய மண்டபத்தில் நடைபெற்ற
ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து பிரார்த்தனைகள்
புரிந்தோருக்கும், இரவு பகல் பாராது எங்கள் துயரத்தில்
பங்கு கொண்ட உற்றார் உறவினர்கள் நண்பர்கள் மற்றும்
அனைத்து வழிகளில் உதவியோருக்கும் நற்பாங்கறிந்து
நன்றி நவில்கின்றோம்.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது"

நன்றி நவில்கின்றோம்
இங்ஙனம்

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் இரணைமடு

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து விடாதே.
பணிவாய் இரு ஆனால் கோளையாகாதே.
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே.
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே.
சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே.
வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே.
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே.
பெருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே.
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே.

\- முதுமொழிகள்

JJ Print 416 298 9322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org